15.09.2025 வா.சா.1 சாட்சி மீண்டும் அழைக்கப்பட்டு சத்தியப்பிரமாணம் செய்யப்பட்டு குறுக்கு விசாரணை செய்யப்பட்டது. (ஓ.எஸ்.எண்.240 /2015 ) திரு.கோமதி.

<u>3 முதல் 5 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை-</u>

1) 1ம்பிரதிவாதி நயினார் எனது வீட்டிற்கு பின்புறம் வீடு கட்டி குடியிருக்கிறார் என்றால் முதலிருந்து குடியிருந்து வருகிறார். 2ம்பிரதிவாதி சுப்பையா எனது வீட்டிற்கு மேற்கே 1948-லிருந்து குடியிருந்து வருகிறார் என்றால் வருடம் எனக்கு தெரியாது அதற்கு பின்னால் தான் நான் 1986ல் வீட்டை கிரையம் பெற்று அனுபவம் செய்து வருகிறேன் என்றால் சரிதான். 1ம்பிரதிவாதி எனக்கு எதிராக அ.வ.எண்.167/1991 வழக்கு தாக்கல் செய்திருந்தார் என்றும் அந்த வழக்கில் 2ம்பிரதிவாதி சுப்பையாவை தரப்பினராக சேர்க்கவில்லை என்றால் சரிதான். வழக்கு தாக்கல் செய்த பிராதிலோ, நிருபண வாக்குமூலத்திலோ என்னுடைய அசல் ஆவணங்கள் என்ன ஆயிற்று என்று சொல்லவில்லை என்றால் சரிதான். அசல் ஆவணத்தை வழக்கறிஞரிடம் தான் கொடுத்தேன். 2 அசல் ஆவணங்களை நீதிமன்றத்திலிருந்து திரும்ப எதற்காக பெற்றுக்கொண்டேன் என்றால் ஜெராக்ஸ் நகல் போதும் என்று எனது வழக்கறிஞர் கோரியதால் அதனை நான் பெற்றுக்கொண்டேன். நான் சொல்லும் காரணத்தை ஐ.ஏ.எண். 20/2021ல் இந்த மனுவில் எழுதப்படவில்லை என்றால் சரிதான். நான் என்ன வேலைசெய்கிறேன் என்றால் ஆடு மேய்கிறேன். வா.சா.ஆ.1 ஆவணத்தில் சொக்கக்கோனார் குமாரர்களான சின்னக்கருப்பக்கோனார், பெருமாள் கோனார், சொக்கக்கோனார் ஆகியோர்களிடமிருந்து நானும், எனது சகோதரர் வடிவேல் மற்றும் மைனர் சகோதரர் காளியப்பன் ஆகிய மூவரும் கிரையம் வாங்கினோம் என்றால் சரிதான். மேற்சொன்ன மூவரும் எப்போது பாகம் பிரித்துக்கொண்டோம் என்றால் 1987ல் வாய்மொழி பாகம் பிரித்துக்கொண்டோம். அந்த விவரத்தை நிருபண வாக்குமூலத்திலும்,பிராதிலும் சொல்லவில்லை என்றால் சரிதான்.

2) இந்த வழக்கில் எனது அண்ணன் வடிவேல்,தம்பி காளியப்பனையும் நான் தரப்பினர்களாக சேர்க்கவில்லை என்றால் சரிதான். நான் கிரையம் பெற்ற போது எனது வீட்டின் வடபுறம் 1ம்பிரதிவாதி நயினார் கிரையம் பெற்றதாக பத்திரத்தில் துலங்கும் என்றால் சரிதான். இந்த கிரையப்பத்திரத்தின் அடிப்படையில் பட்டா கிடையாது என்றால் நான் வாங்கவில்லை. பட்டா ஏன் வாங்கவிலலை என்றால் பத்திரம் இருப்பதால் பட்டா வாங்கவிலலை. ஒரு சொத்திற்கு பட்டா வேண்டுமா அல்லது வேண்டாமா என்றால் வேண்டும். சொத்திற்கு பட்டா கண்டிப்பாக வேண்டும் என்றால்

சரிதான். வா.சா.ஆ.2 சின்னக்கருப்பக்கோனார் யார் என்றால் கோமதியா பிள்ளையிடமிருந்து சின்னக்கருப்பக்கோனார் பெற்ற ஆவணம் ஆகும். வா.சா.ஆ.2 பத்திரத்தில் மொத்த இடத்தையும் வாங்கிவிட்டேனா என்றால் கிழமேல் 27 ½ அடியும், தென்வடல் 32 1/2 அடியும் வா.சா.ஆ.1 ன் மூலமாக நானும், எனது சகோதரரும்கிரையம் பெற்றுள்ளோம். தென்வடல் 34 ல் மீதமுள்ள 1 ½ அடி எங்கு உள்ளது என்றாலும் வீட்டிற்கு மேல்பக்கம் 1 ½ அடி உள்ளது என்றால் அது பத்திரத்தில் சேர்க்கப்படவில்லை.

3) வாசா.ஆ.1,2 அசல் ஆவணங்களுக்கும் குறியீடு செய்யப்பட்டுள்ள நகல் ஆவணங்களுக்கும் வித்தியாசம் இருப்பதால் முன் கூட்டியே அசல் ஆவணத்தை பெற்றுச்சென்றுள்ளேன் என்றால் சரியல்ல.

<u>குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u> - வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கிணங்க வேறு தேதிக்கு ஒத்தி வைக்கப்படுகிறது.

திறந்த நீதிமன்றத்தில் சாட்சியின் சாட்சியத்தை தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சிக்கு வாசித்து காண்பிக்கப்பட்டு அவரால் சரி என ஒப்புக்கொள்ளப்பட்டது.

(ஒப்பம்)C.கருப்பசாமி,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
கோவில்பட்டி,
15.09.2025.